**தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்**

எண். 100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை- 600 032.

தொலைபேசி : 044– 22201337

மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

முன்னிலை : மு. மாலிக் பெரோஸ்கான், இ.ஆ.ப., (ஓ)

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

**ஆணை எண்.151 /மா/2022**

**நாள் : 15 .11.2022**

| | | |
|---|---|---|
| திருமதி. S.சுமதி,<br>திருமுல்லைவாயில். | – | முறையீட்டு மனுதாரர் |
| ஆணையர்,<br>ஆவடி மாநகராட்சி, ஆவடி. | – | எதிர்மனுதாரர் |

சென்னை, திருமுல்லைவாயில், தேவி வைஷ்ணவி நகர், சுபாஷ் தெரு, எண்.75–ல் வசிக்கும் திருமதி. S. சுமதி என்பவரின் 07.09.2022 நாளிட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் 12.09.2022-ல் பெறப்பட்டு 151மா/2022 என எண்ணிடப்பட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. மனுதாரரின் முறையீட்டு மனு பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

**ஆணை**

சென்னை, திருமுல்லைவாயில், தேவி வைஷ்ணவி நகர், சுபாஷ் தெரு, எண்.75–ல் வசிக்கும் திருமதி. S. சுமதி என்பவர் தனது முறையீட்டு மனுவில், கீழ்க்கண்ட புகார்களை தெரிவித்துள்ளார்:

" நான் அரசுக்கு Vacant Land Tax. Land approval fees, building approval fees, electricity bill போன்ற அனைத்து வகையான கட்டணங்களையும் முறையே செலுத்தி வருகிறேன். நாங்கள் தரைதளம் (Ground floor only) மட்டுமே வீடு கட்டி வாழ்ந்து வருகிறோம். நாங்கள் வசித்து வருகின்ற குடியிருப்பு பகுதிகளில் மற்ற அனைவரும் அமைத்துள்ள குடியிருப்பு நேர்வரிசையில் நாங்களும் எங்கள் வீட்டை கட்டி வாழ்ந்து வருகின்றோம். இதனால் மற்றவர்களால் எங்களுக்கோ, எங்களால் மற்றவர்களுக்கோ எவ்விதமான தொல்லையோ, பிரச்சனையோ அறவே

கிடையாது. நாங்கள் எங்கள் நிலத்தில் சுற்றுசுவர் அமைத்து போதுமான அளவு சுற்று இடைவெளி விட்டு வீடு அமைத்து வாழ்ந்து வருகின்றோம். எங்கள் வீட்டின் கிழக்கு பக்கத்தில் எனது வீட்டின் நேர்வரிசையில் மூன்று மாடி வீடு அமைத்து (பிளாட் நெம்பர் 76A மற்றும் 76B) வாழ்ந்து கொண்டு இருக்கின்ற திருமதி. திலகவதி 76A மற்றும் திருமதி.புவனேஸ்வரி 76B என்பவர்கள் எங்களுடன் வீணாக சண்டையிட்டு எங்கள் மீது பொய்யான தகவலை புகாராக ஆவடி மாநகராட்சியிடம் அளித்துள்ளார்கள். இவர்கள் (திருமதி. திலகவதி மற்றும் திருமதி.புவனேஸ்வரி ) அவர்களுடைய பணம் செல்வாக்கையும், மாநகராட்சி பள்ளி ஆசிரியர்கள் என்கிற அதிகாரத்தையும் பயன்படுத்தி ஆவடி மாநகராட்சி மூலம் எங்கள் வீட்டின் மீது பலவகை குறிப்பாணை (NOTICE ) கொடுக்க வைத்து எங்களுடைய அடிப்படையான வாழ்வாதாரம் பாதிக்கும் வகையில் செயல்படுகிறார்கள். இதனால் நாங்கள் மிகுந்த மன உளைச்சலில் உள்ளோம்.

நாங்கள் திருமதி.திலகவதி 76A மற்றும் திருமதி.புவனேஸ்வரி 76B இவர்கள் மீது ஆவடி மாநகராட்சியிடம் இவர்கள் எவ்வித திட்ட அனுமதி எதுவும் பெறாமலும் அரசுக்கு எவ்வித வரி (TAX) கட்டணங்களும் செலுத்தாமலும் தலா (each) மூன்று அடுக்குமாடி வீடு கட்டி வாழ்ந்து வருகிறார்கள் என்று புகார்கள் பல அளித்தும், இவர்களுடைய பணம் செல்வாக்கையும், மாநகராட்சி பள்ளி ஆசிரியர்கள் என்கிற அதிகாரத்தையும் கொண்டு ஆவடி மாநகராட்சி இவர்களின் வீட்டின் மீது எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்காத வகையில் தடுத்து வருகிறார்கள். அவர்கள் தங்கள் வீட்டை சுற்றி ஒரு அங்குலம் கூட இடம் விடாமல் கட்டிக்கொண்டு சுவர் வர்ணம் பூசுவதற்கு அடுத்தவர்களை தொந்தரவு தரும் வகையில் உள்ளார்கள் என்பதை கண்டும், காணாமல் இருக்கும் ஆவடி மாநகராட்சி உடனே அவர்கள் மீது தகுந்த நடவடிக்கை எடுக்க உத்தரவு வழங்கும்படி மிகவும் பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

எனவே மாண்புமிகு அய்யா அவர்கள் எங்கள் மீது கருணை கூர்ந்து ஆவடி மாநகராட்சி எங்கள் வீட்டின் மீது கொடுத்துள்ள அனைத்து ஆணைகளையும் ரத்து செய்து, மேல் நடவடிக்கை எதுவும் தொடராதவண்ணம் உத்தரவு வழங்கி தரும்படியும், நாங்கள் எந்தவிதமான மன உளைச்சல் இல்லாத நிம்மதியான வாழ்க்கை வாழ்வதறகு வழிவகை செய்து தரும்படி மிகவும் பணிவுடன் வேண்டிக்கேட்டுக்கொள்கிறேன். இத்துடன் நாங்கள் வசித்து வருகின்ற குடியிருப்பு பகுதியில் மற்ற அனைவரும் அமைத்துள்ள குடியிருப்பு நேர்வரிசையில் நாங்களும் எங்கள் வீட்டை கட்டி உள்ளோம் என்பதற்கான புகைப்படங்களின் ஆதாரத்தை இணைத்துள்ளோம். திருமதி.திலகவதி மற்றும் திருமதி.புவனேஸ்வரி மீது கொடுக்கப்பட்டுள்ள புகாரின் நகல்கள் இத்துடன் இணைத்துள்ளோம்" என தெரிவித்துள்ளார்.

2) முறையீட்டு மனுதாரரின் புகார் மனு மீதான விரிவான அறிக்கையை அனுப்பக்கோரி ஆணையர், ஆவடி மாநகராட்சிக்கு இம்முறைமன்ற நடுவ 21.09.2022 நாளிட்ட அறிவிப்பு அனுப்பப்பட்டது.

3) மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் ஆகியோர் இம்முறைமன்ற நடுவ 07.10.2022 நாளிட்ட அழைப்பாணைகள் மூலம் 20.10.2022 அன்று நேரடி விசாரணைக்கு ஆஜராகுமாறு அழைக்கப்பட்டனர்.

4) மனுதாரர் 20.10.2022 அன்றைய நேரடி விசாரணையில் ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளார்:

" ஆவடி மாநகராட்சி, திருமுல்லைவாயில் கிராமம், தேவி வைஷ்ணவி நகர், சுபாஷ் தெரு, மனை எண்.75ல் சொந்தமாக நாங்கள் வீடு கட்டியுள்ளோம். அவ்வீடு மாநகராட்சியில் அனுமதி பெற்று கட்டப்பட்டது. எங்களது பக்கத்து வீட்டில் வசிப்பவர் நாங்கள் அனுமதிக்கு மாறாக வீடு கட்டியுள்ளதாகக் கூறி, புகார் மனுவினை ஆவடி மாநகராட்சிக்கு அனுப்பியுள்ளனர். அப்புகாரின் மீதான நடவடிக்கையாக ஆவடி மாநகராட்சி அலுவலர்கள் plan deviation notice கொடுத்துள்ளார்கள். அதனைத் தொடர்ந்து de occupation notice வழங்கினர். அதனை எதிர்த்து, மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றத்தில் எங்களால் வழக்கு தொடரப்பட்டது. (W.P. No. 26679/2022) அதன் மீதான **30.09.2022** நாளிட்ட தீர்ப்பில் அரசுக்கு சிறப்பு மேல் முறையீடு செய்து, அம்முறையீட்டு வழக்கை மூன்று மாத காலத்திற்குள் முடிக்க தமிழ்நாடு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறைக்கு ஆணையிட்டுள்ளது. மேலும், அதுவரை ஆவடி மாநகராட்சியால் வழங்கப்பட்ட de occupation notice அறிவிப்பு தற்காலிகமாக Suspend செய்யப்படுகிறது என ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. எனவே நாங்கள் எங்களுக்குத் தெரியாமல் தவறாக அனுமதிக்கு மாறாக கட்டிய வீட்டின் மீது மேல் நடவடிக்கை எதையும் மாநகராட்சியால் எடுக்காமல் இருக்க ஆவன செய்யுமாறு இம்முறைமன்றத்தை கேட்டுக்கொள்கிறேன். மேலும் எனது வீட்டிற்கு பக்கத்து வீட்டில் வசித்து வருபவர்களின் புகார் மனுவின் மீது ஆவடி மாநகராட்சி அலுவலர்கள் நடவடிக்கை எடுத்து விட்டனர். ஆனால், கட்டட விதிகளுக்கு மாறாக 3 மாடி கட்டடம் கட்டியுள்ள Plot No.76A திருமதி. திலகவதி, திருமதி.புவனேஸ்வரி Plot No.76B அவர்கள் மீது மாநகராட்சியால் எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என்பதை இம்முறைமன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்" என தெரிவித்துள்ளார்.

5) 20.10.2022 அன்றைய நேரடி விசாரணையில் ஆவடி மாநகராட்சியின் நகரமைப்பு அலுவலர் ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை சமர்ப்பித்துள்ளார்:

" மனுதாரர் திருமதி.சுமதி என்பவர், ஆவடி தேவி வைஷ்ணவி நகரில் கட்டியுள்ள வீட்டிற்கு திட்ட அனுமதி பெற்றுள்ளார். ஆனால் அவரது வீடு திட்ட அனுமதிக்கு மாறாக கட்டப்பட்டதைத் தொடர்ந்து Lock and Seal Notice மற்றும் De-occupation Notice வழங்கப்பட்ட நிலையில், மனுதாரரால் சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டு (W.P. No.26679/2022) அதன் மீதான **30.09.2022** நாளிட்ட தீர்ப்பில் மனுதாரர் அரசுக்கு சிறப்பு மேல்முறையீடு செய்து, அம்முறையீட்டு வழக்கை மூன்று மாத காலத்திற்குள் முடிக்க தமிழ்நாடு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறைக்கு ஆணையிட்டுள்ளது. மேலும், அதுவரை ஆவடி மாநகராட்சியால் வழங்கப்பட்ட de-occupation notice தற்காலிகமாக suspend செய்யப்படுகிறது எனவும் ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளதைத் தொடர்ந்து, மேற்கண்ட வழக்கின் மீதான தீர்ப்பினையொட்டி மேல் நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை இம்முறைமன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும் மனுதாரரின் புகாரில் கண்டுள்ள திருமதி.திலகவதி கட்டியுள்ள கட்டிடம் திட்ட அனுமதிக்கு மாறாக கட்டப்பட்டுள்ளது மற்றும் புவனேஸ்வரி அவர்களின் அனுமதியற்ற கட்டிடத்திற்கு (un authorized construction) இரண்டு நோட்டீஸ் வழங்கப்பட்டுள்ளது. இன்னும் ஒரு வார காலத்தில் Lock and seal notice வழங்கப்படும். அதனைத் தொடர்ந்து de-occupation Notice வழங்கப்படும் என்பதை இம்முறைமன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும் இம்முறைமன்றத்தில் என்னால் சமர்ப்பிக்கப்படும் ஆவடி மாநகராட்சி ஆணையரின் 19.10.2022 நாளிட்ட கடிதத்தில் கண்டுள்ள விவரங்களையும் எனது மேல் வாக்குமூலமாக பதிவு செய்துகொள்ளும்படி இம்முறைமன்றத்தைக் கேட்டுக்கொள்கிறேன்" என தெரிவித்துள்ளார்.

6) ஆவடி மாநகராட்சி ஆணையர் தனது 19.10.2022 நாளிட்ட கடிதத்தில் கீழ்ககண்டவாறு தெரிவித்துள்ளார்:

" ஆவடி மாநகராட்சி திருமுல்லைவாயில் கிராமம், பிளாட் எண்.75, சுபாஷ் தெரு, தேவி நகரில் வசிக்கும் திருமதி.சுமதி க/பெ. திரு.செந்தில்குமார் என்பவர் அதே தெருவில் வசிக்கும் K. திலகவதி என்பவர் தனது வீட்டின் சுற்று சுவரை கட்டவிடாமல் தடுக்கின்றார் எனவும் சுற்று சுவர் கட்டுவதற்கு அவர்கள் தடை செய்யாமல் உதவிடுமாறு 11.08.2021 தேதிய கடிதத்தில் கேட்டுக்கொண்டுள்ளார். அதன் அடிப்படையில் நகரமைப்பு அலுவலர் மற்றும் நகரமைப்பு ஆய்வர் அவர்கள் நேரில் சென்று ஆய்வு மேற்கொண்டதில் K. திலகவதி அவர்களின் வீட்டு ஜன்னலுடன் சேர்த்து காற்று புகா வண்ணம் திரு.செந்தில்குமார் சுற்று சுவர் கட்டுவது தெரியவந்தது. எனவே இடைவெளி விட்டு சுற்று சுவர் கட்டுமாறு நகரமைப்பு அலுவலரால் அறிவுறுத்தப்பட்டது. மேலும் நகரமைப்பு அலுவலர் மற்றும் நகரமைப்பு ஆய்வர் அவர்களின் அறிவுறுத்தலையும் மீறி திரு.செந்தில்குமார் அவர்கள் K. திலகவதி அவர்களின் ஜன்னலுடன் சேர்த்து சுற்று சுவர் கட்டும் பணி மேற்கொள்ளப்பட்டதால் திரு.செந்தில்குமார் மற்றும் திருமதி.சுமதி ஆகியோர் மீது K. திலகவதி என்பவர் மாண்பமை அம்பத்தூர் மாவட்ட முனுசீப் நீதிமன்றத்தில் O.S.No.219/2021 வழக்கு தொடர்ந்துள்ளார். மேலும் வழக்கு இந்நாள் வரை நிலுவையில் உள்ளது. மேலும் 01.09.2021, 28.10.2021 மற்றும் 25.11.2021 தேதிய திருமதி.சுமதி அவர்களின் கடிதங்களில் அனுமதியற்ற கட்டடம் கட்டியுள்ள K. திலகவதி அவர்கள் மீது நடவடிக்கை மேற்கொள்ளுமாறு தங்கள் கடிதத்தில் தெரிவித்துள்ளனர்.

திருமதி.சுமதி க/பெ.திரு. செந்தில்குமார் 29.03.2022 தேதியன்று இவ்வலுவலகத்திற்கு சமர்ப்பித்த கடிதத்தில் பிளாட் எண்.76A. மற்றும் 76Bல் வசிக்கும் திருமதி.திலகவதி மற்றும் திருமதி.புவனேஸ்வரி ஆகியோர் Side Set back விடாமல் கட்டிடம் கட்டியுள்ளதாகவும், இரண்டு விதமான பட்டா வைத்திருப்பதாகவும் அதனின் உண்மை தன்மை குறித்து ஆவடி வட்டாட்சியரிடம் கோரியதில் அவர்களின் பட்டா அரசு அலுவலகத்தில் வழங்கப்படவில்லை எனவும் இது குறித்து 28.12.2021 தேதி அன்று உத்தரவு வழங்கியுள்ளதாகவும், அவர்களின் கட்டடத்தின் மீது நடவடிக்கை மேற்கொள்ளவும் தெரிவித்துள்ளார்.

08.04.2022 தேதி அன்று திருமதி. திலகவதி என்பவருக்கு வேலை நிறுத்தம் மற்றும் கட்டிட அனுமதி கேட்டு (Stop work/Notice calling for approved plan) பிரிவு 56 மற்றும் 57 பிரிவு 85 Tamil Nadu Town and Country Planning Act, 1971 ன்படி முதல் அறிவிப்பு வழங்கப்பட்டது. மேலும் 11.04.2022 தேதிய கடிதத்தில் திருமதி.சுமதி என்பவர் திருமதி.திலகவதி மற்றும் திருமதி.புவனேஸ்வரி ஆகியோரின் கட்டட அனுமதி நகல் வழங்குமாறு கேட்டுக்கொண்டனர். தனிநபர் விவரம் என்பதால் கட்டட அனுமதி நகல் அவர்களுக்கு வழங்கப்படவில்லை. மேற்படி திரு.செந்தில்குமார், திருமதி.சுமதி அவர்களுக்கு வழங்கப்பட்ட கட்டட அனுமதிக்கு மாறாக விதி

மீறி கட்டடம் கட்டப்பட்டுள்ளதாக புகார் வந்ததின் அடிப்படையில் உதவி பொறியாளர் நேரில் ஆய்வு செய்யப்பட்டதில் திரு.செந்தில்குமார், திருமதி.சுமதி அவர்களின் விதி மீறி கட்டப்பட்ட கட்டடத்திற்கு ஆவடி மாநகராட்சி சட்டம் பிரிவு 282(1) (2)ன் கீழ் 08.04.2022 அன்று அறிவிப்பு வழங்கப்பட்டது. மேலும் 04.05.2022 அன்று Tamil Nadu Town and Country Planning Act, 1971ன்படி பிரிவு 56 மற்றும் 57 பிரிவு 85–ல் 04.05.2022 வரப்பெற்ற திரு.செந்தில்குமார் மற்றும் திருமதி.சுமதி அவர்களின் கடிதத்தில் தெரிவித்துள்ளபடி திருமதி. திலகவதி மற்றும் திருமதி.புவனேஸ்வரி அவர்களின் அனுமதியற்ற கட்டடத்தின மீது நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு இருவருக்கும் அறிவிப்பு வழங்கப்பட்டது. 02.05.2022 தேதிய திருமதி.சுமதி அவர்களின் கடிதத்தில் பிளாட் எண்.76A. 76B–ல் வசிக்கும் K.திலகவதி மற்றும் K.புவனேஸ்வரி அவர்களின் கட்டிட அனுமதி நகல் கேட்டு திரும்பவும் மனு சமர்ப்பித்துள்ளனர். தனிநபர் விவரம் என்பதால் கட்டிட அனுமதி நகல் வழங்கப்படவில்லை.

திருமதி.புவனேஸ்வரி என்பவருக்கு வழங்கப்பட்ட கட்டிட வேலை நிறுத்தம் மற்றும் கட்டிட அனுமதி கோரும் அறிவிப்பிற்கு அவர்களின் வழக்கறிஞர் மேற்படி திருமதி.புவனேஸ்வரி அவர்கள் கட்டப்பட்ட கட்டடம் இருக்கும் இடத்தின் பட்டாவில் திருமதி.சுமதி என்பவர் பெயருக்கு தவறுதலாக online பட்டா வழங்கப்பட்டுவிட்டது எனவும் இது தொடர்பாக அம்பத்தூர் நீதிமன்றத்தில் O.S. No.219/2021 வழக்கு நிலுவையில் உள்ளது எனவும் பட்டா மாற்றம் குறித்து, DRO திருவள்ளூர் அவர்களுக்கு கடிதம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது எனவும் மேற்படி பட்டா தங்கள் பெயருக்கு வழங்கப்பட்ட பின்னர் முறைப்படி கட்டிட அனுமதி பெற்று கட்டிட கட்டுமான பணி மேற்கொள்ளப்படும் எனவும் அதுவரை கட்டிட வேலை ஏதும் நடைபெறாது அதனை நிறுத்தி வைப்பதாகவும் தனது 16.05.2022 தேதிய கடிதத்தில் தெரிவித்துள்ளார்.

இதற்கிடையில் திருமதி.திலகவதி மற்றும் திருமதி.புவனேஸ்வரி ஆகியோர் மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றத்தில் W.P.No.12015/2022, W.M.P. No.11434/2022–ல் 05.05.2022 அன்று தீர்ப்பாணை வழங்கப்பட்டது. அதன் அடிப்படையில் மனுதாரர் மற்றும் எதிர் மனுதாரர் இருவரையும் நேரில் அழைத்து விசாரணை 28.06.2022 மற்றும் 01.07.2022, மேற்கொள்ளப்பட்டதில் இருவரும் தங்கள் தரப்பு வாக்குமூலத்தினை தங்கள் கடிதம் வாயிலாக இவ்வலுவலகத்தில் சமர்ப்பித்தனர். மேலும் எதிர் மனுதாரர் ஆகிய திருமதி.திலகவதி அவர்களுக்கு மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றத்தின் வழக்கு தொடர்பாக 14.07.2022 தேதி அன்று பதில் அனுப்பப்பட்டது.

மேலும் 04.07.2022 மனு ஏற்கனவே சமர்ப்பிக்கப்பட்ட 04.05.2022 தேதிய மனுவின் நகலாகும். அதன்படி நடவடிக்கை ஏற்கனவே மேற்கொள்ளப்பட்டது என தெரிவிக்கப்படுகிறது. மேற்படி மனுதாரர் விதி மீறி கட்டிட அறிவிப்பு வழங்கப்பட்ட பின்னரும் கட்டிட அனுமதி வரைபடத்தின்படி அதனை சரி செய்யாமல் மேலும் கட்டிடம் கட்டிக்கொண்டிருப்பதாக எதிர் மனுதாரர் புகைப்படத்துடன் புகார் இவ்வலுவலகத்திற்கு அளித்துள்ளார். உதவி பொறியாளர் அவர்கள் நேரில் சென்று ஆய்வு செய்ததன் அடிப்படையில் மனுதாரராகிய திரு.செந்தில்குமார் திருமதி.சுமதி ஆகியோருக்கு Town and Country Planning Act, 1971 sec 56 and 57 with sec 85-ன்படி Locking, Sealing and Demolition Notice 04/08/2022 அன்று வழங்கப்பட்டது.

மேலும் 20.09.2022 அன்று திருமதி.சுமதி க/பெ. திரு.செந்தில்குமார் என்பவருக்கு Town and Country Planning Act. 1971 section 56(2) sub clause (iii) and 2(A)–ன்படி de-occupation அறிவிப்பு வழங்கப்பட்டது.

திருமதி.சுமதி க/பெ.திரு.செந்தில்குமார் மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றத்தில் W.P.No. 26679/2022 வழக்கு தொடுத்ததில் 30.09.2022 அன்று தீர்ப்பாணை வழங்கப்பட்டு உள்ளது. அதில் மனுதாரர் திருமதி.சுமதி க/பெ. திரு.செந்தில்குமார் அவர்களின் Tamil Nadu Town and Country Planning Act, 1971 section 80-A(iii)ல் தமிழ்நாடு நகர்ப்புற மற்றும் வளர்ச்சி துறையில் மேல் முறையீடு செய்துள்ளதாகவும், அந்த மேல் முறையீடு வழக்கை மூன்று மாத காலத்திற்குள் முடிக்க தமிழ்நாடு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறைக்கும் மற்றும் சென்னை பெருநகர வளர்ச்சி குழுமத்திற்கும், ஆவடி மாநகராட்சியால் வழங்கப்பட்ட de-occupation அறிவிப்பு தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்படுகிறது எனவும் ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. எனவே மேற்படி நிலுவையில் உள்ள மேல்முறையீடு வழக்கிற்கு வழங்கப்படும் தீர்ப்பாணையை பொறுத்தே மேல் நடவடிக்கை தொடரப்படும் என்ற விவரம் தங்களுக்கு பணிந்து தெரிவிக்கப்படுகிறது" என தெரிவித்துள்ளார்.

7) முறையீட்டு மனுதாரரின் மனு மற்றும் வாக்குமூலம், ஆவடி மாநகராட்சி நகரமைப்பு அலுவலரின் வாக்குமூலம், ஆவடி மாநகராட்சி ஆணையரின் அறிக்கை ஆகியவை இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு பின்வரும் விவரங்கள் கண்டறியப்பட்டுள்ளன:

திருமதி.சுமதி என்பவர், ஆவடி தேவி வைஷ்ணவி நகரில் கட்டியுள்ள வீட்டிற்கு திட்ட அனுமதி பெற்றுள்ளார். ஆனால் அவரது வீடு திட்ட அனுமதிக்கு மாறாக கட்டப்பட்டதைத் தொடர்ந்து Lock and Seal Notice மற்றும் De-occupation Notice வழங்கப்பட்ட நிலையில், மனுதாரரால் சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டு (W.P. No.26679/2022) அதன் மீதான 30.09.2022 நாளிட்ட தீர்ப்பில் மனுதாரர் அரசுக்கு சிறப்பு மேல்முறையீடு செய்து, அம்முறையீட்டு வழக்கை மூன்று மாத காலத்திற்குள் முடிக்க தமிழ்நாடு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறைக்கும் ஆணையிட்டுள்ளது. மேலும், அதுவரை ஆவடி மாநகராட்சியால் வழங்கப்பட்ட de-occupation notice தற்காலிகமாக suspend செய்யப்படுகிறது எனவும் ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. மேலும், மனுதாரரின் புகாரில் கண்டுள்ள திருமதி.திலகவதி கட்டியுள்ள கட்டிடம் திட்ட அனுமதிக்கு மாறாக கட்டப்பட்டுள்ளது மற்றும் புவனேஸ்வரி அவர்களின் அனுமதியற்ற கட்டிடத்திற்கு (unauthorized construction) நோட்டீஸ் வழங்கப்பட்டுள்ளது. இன்னும் அதனைத் தொடர்ந்து De-occupation Notice ஆவடி மாநகராட்சியால் வழங்கப்படும் என்பதையும் அறியமுடிகிறது.

மேற்கண்ட நிலையில் திருமதி. சுமதி என்பவர் ஆவடி தேவி வைஷ்ணவி நகரில் கட்டியுள்ள வீடு திட்ட அனுமதிக்கு மாறாக கட்டப்பட்டதைத் தொடர்ந்து, மனுதாரர் சென்னை உயர்நீதிமன்றத்தில் தொடுத்த வழக்கில் 30.9.2022 வழங்கப்பட்ட ஆணையின் அடிப்படையில், செய்யப்பட்டுள்ள மேல் முறையீட்டில் வழங்கப்படும் ஆணையின்படி நடவடிக்கை தொடரவும்

மனுதாரரின் புகாரில் கண்டுள்ள திருமதி. கே. திலகவதி கட்டியுள்ள கட்டடம் திட்ட அனுமதிக்கு மாறாக கட்டப்பட்டுள்ளது. திருமதி. புவனேஸ்வரி அவர்களின் அனுமதியற்ற கட்டடத்திற்கு (unauthorized construction) நோட்டீஸ் வழங்கப்பட்டுள்ளது. இதன் தொடர்ச்சியாக தமிழ்நாடு நகர் ஊரமைப்பு சட்டம் 1971ன் கீழ் Lock and Seal Notice மற்றும் Demolition Notice அறிவிப்பு வழங்கியதைத் தொடர்ந்து ஆவடி மாநகராட்சியால் மேற்கொள்ள வேண்டிய தொடர் நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு ஆவடி மாநகராட்சி ஆணையருக்கு அறிவுறுத்தி இம்முறைமன்ற நடுவம் ஆணையிடுகிறது.

மேலும் விதிகளை மீறி திருமதி. திலகவதி மற்றும் திருமதி.புவனேஸ்வரி ஆகிய இருவரும் கட்டியுள்ள கட்டடத்தின் மீது உரிய காலத்தில் எந்தவித நடவடிக்கையும் எடுக்காத ஏற்கனவே இருந்த மற்றும் தற்பொழுது இருக்கும் சம்மந்தப்பட்ட அலுவலர்கள் மீது நடைமுறையிலுள்ள உரிய சட்ட விதிகளின்படி துறைரீதியான ஒழுங்கு நடவடிக்கை மேற்கொள்ள ஆவடி மாநகராட்சி ஆணையருக்கு பரிந்துரைத்து இம்முறைமன்ற நடுவம் ஆணையிடுகிறது.

2022-ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 15 -ஆம் நாள் என்னால் கையொப்பமிட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணையிடப்படுகிறது.

//ஒப்பம்//
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

பெறுநர்

1. திருமதி. S. சுமதி,
   க/பெ. திரு. P. செந்தில்குமார்,
   எண்.75, சுபாஷ் தெரு,
   தேவி வைஷ்ணவி நகர்,
   திருமுல்லைவாயில்,
   சென்னை – 600 062.

2. ஆணையர்,
   ஆவடி மாநகராட்சி,
   ஆவடி.

3. நகராட்சி நிர்வாக இயக்குநர்,
   நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
   எண்.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
   ராஜா அண்ணாமலைபுரம்,
   சென்னை – 600 028.

4ஆ. இணை இயக்குநர்
ஒருங்கிணைப்பாளர் (Nodal Officer)
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
எண்.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
ராஜா அண்ணாமலைபுரம்,
சென்னை – 600 028.

நகல்

மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச் செயலர்.
இகோ/உதிரிகள்

//ஆணைப்படி/அனுப்பப்படுகிறது//

செயலாளருக்காக